முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 745**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.10.2021, புதன்கிழமை

1. கலிவெல்ல பிறந்த மாதவசியே
கருணையாக வந்த மகா ஞானியே
அழியாமை தந்தருளி உலகோரை
அனைவருக்கும் ஞான பலம் கூட்டி அருள வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென அரங்கன் வழிகாட்டும் மார்க்கமே
வையகத்தை பாதுகாப்புக்கு கொண்டு சென்று தேற்றும்
3. தேற்றம் தரும் ஒரே ஞானி கலியுகத்தில்
தெரிவிப்பேன் என் அவதாரமான தேசிகனே
மாற்றம் உண்டு அரங்கன் கொள்கையால்தான்
மகத்துவம் உண்டு அரங்கன் தர்மத்தால்தான்
4. தர்மத்தை உலகோர் கடைபிடிக்க
தரணியே தனித்துவம் பெற்று இனிதே
கர்மவினை ஓடி உலகமக்களெல்லாம்
கலியில் ஞானவான்கள் என்கின்ற புது அடையாளம் கண்டு
5. கண்டுமே அரங்கன் வழி உலகமக்கள்
கடைத்தேற்றமோடு ஞானிகள் ஆகும் வாய்ப்பு பெற்று
தொண்டு வழி இனிதே சிறந்து உயர்ந்து
தேசிகன் மூலமாக உலகமாற்றம் செய்து அற்புதம் காண்பர்
6. **காணவே அரங்கனை ஆறுமுகன் யான்**
**கலியுக மாற்றத்துக்காக அனுப்பியுள்ளேன்**
(முருகப்பெருமானே உலக மாற்றத்திற்கு அனுப்பியவர்தான் மகான் ஆறுமுக அரங்கமகாதேசிகர்)
வரமென அரங்கன் தொடர்பு கொண்டோரெல்லாம்
வாழும் காலமே ஞானிகளாக மாறி சிறப்பர்
7. சிறப்பு தரும் அரங்கனே கலியுகத்தை காக்கவந்த
சிவராஜயோகி மறுப்பின்றி அன்னதனால்
கலியுக மக்கள் அரங்கன் வழிக்கு வர
மண்ணுலகை மாற்றி பேரானந்தம் பெறுவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—